
www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# தூண்டில்



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 23

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாசிசவாதிகளின் சித்திரவதைகள்.

நான் [redacted]லத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் படிக்கும் மாணவன்.

89இல், மாலை 3 மணியளவில் [redacted]கல்லூரி ஒழுங்கையால் போய்க் கொண்டிருக்கும்போது எதிர்ப்பக்கத்திலிருந்து அதே ஒழுங்கையில் சுமார் 10 இந்திய இராணுவத்தினரும் சுமார் 5 இளைஞர்களும் வந்து கொண்டிருப்பதைக் கண்டேன்.

நான் அவர்களைக் கடந்துபோகும்போது இந்திய இராணுவத்தினர் எனது தேசிய அடையாள அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு என்னிடம் திருப்பித் தந்தனர். சில நிமிடங்களின் பின் 2 இளைஞர்கள் என்னிடம் வந்துமறுபடி தேசிய அடையாள அட்டையை வாங்கிப் பார்த்து விட்டு திருப்பித் தராமல் தாங்களே வைத்துக் கொண்டனர். பின்னர் தங்களைத் தொடர்ந்துவரும்படி என்னைப் பணித்தனர்.

அவர்கள் உத்தரவிட்டபடி நான் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். அவர்களுடனிருந்த இந்திய இராணுவத்தினர் நான் அவர்களுடன் வருவது பற்றி எதுவும் கதைக்கவில்லை.

இருட்டும் நேரம் நாங்கள் [redacted]த்திலுள்ள ஈ.என்.டி.எல்.எவ் முகாமை வந்தடைந்தோம்.

இம் முகாமுக்குள் வந்ததும் ஒரு பாயில் இருக்குமாறு நான் பணிக்கப்பட்டேன். எனக்கு பிளேன்ரீ குடிக்கத் தந்தார்கள். இதன் பின்னர் அங்கு வைத்து நான் கடுமையாகத் தாக்கப்பட்டேன்.

மறுநாள் காலை சுமார் 10 மணியளவில் ஈ.என்.டி.எல்.எவ்வைச் சேர்ந்த 4பேர் வந்து வயர், பெல்ற் போன்றவற்றால் என்னைத் தாக்க ஆரம்பித்தார்கள். இது பிற்பகல் சுமார் 2 மணிவரை நீடித்தது.

ஏதாவது இயக்கத்தில் நான் இருக்கிறேனா என்று கேட்டார்கள். நான் ஒரு மாணவன், எந்த ஒரு இயக்கத்துடனும் எனக்குச் சம்பந்தமில்லையென்று பதிலளித்தேன். அவர்கள் எனது பதிலை ஏற்றுக்

கொள்ள மறுத்ததுடன் நான் எல்.ரி.ரி.ஈ யைச் சேர்ந்தவன் என்று கூறினூர்கள்.

தொடர்ந்தும் நான் இரும்புப் பைப்பால் தாக்கப்பட்டேன்.

மூச்சுத் திணறும்படி தலையில் தண்ணீரை ஊற்றினூர்கள். இந் நேரத்தில் பயங்கரமான காயங்கள் என் உடம்பில் இருந்தன. என் கைகள் பின்பக்கமாகக் கயிற்றினுல் கட்டப்பட்டிருந்தன.

எனது சேட்டையும், காற்சட்டையையும் அகற்றினூர்கள். பின்னர் துணிக் குவியலை எனது வாய்க்குள் ஒட்டித் திணித்தார்கள். முகம் முழுவதும் மிளகாய்த் தூளை பூசினூர்கள்.

பிறகு முகம் குப்புற தரையில் கிடக்குமாறு சொன்னூர்கள். அப்படியே செய்தேன்.

அதன் பின் தண்ணீர் நிரப்பப்பட்ட பன்ராப் போத்தலை எனது மலவாசலுக்குள் செருக முயற்சித்தார்கள். அவர்களால் முடியவில்லை. மறுபடியும் மிகுந்த பலத்துடன் மலவாசலுக்குள் ஒட்டி வயிற்றுப் பாகத்திற்குள் ஊடுருவிப் போகக்கூடியதாகச் செலுத்திவிட்டார்கள். நான் பயங்கரமான வேதனையை அனுபவித்தேன்.

இதன் பின்னர் சுமார் 6 வான் ரயர்களை எனது பின் பகுதியில் அடுக்கினூர்கள். அடுக்கிய ரயர்களின் மேல் பல சீமெந்துப்பைகளை ஏற்றி வைத்தார்கள்.

நான் வலியால் துடித்துக் கொண்டிருந்தபோது சுமார் 8யார் தள்ளி 22வயது மதிக்கத் தக்க இளைஞன் ஒருவன் என்னைப்போலவே முகம் குப்புறப்படுக்க வைக்கப்பட்டு அவன் மேல் கொன்கிரீட் கல்லுகள் அடுக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

அரை மணித்தியாலமாக நான் இதே நிலைமையிலேயே இருந்தேன்.

பின்னர் சீமெந்துப் பைகளையும் ரயர்களையும் அகற்றினூர்கள்.

சில நிமிடங்களின் பின் நான் எழுந்திருக்கும்படி கேட்கப்பட்டேன். சாப்பிட 1கிலோவாழைப்பழமும், 1 கிளாஸ் பாலும் தந்தார்கள். நான் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்த போது பலவந்தமாக ஊட்டினூர்கள்.

பின்னர் மலசலகூடத்திற்கு கூட்டிச்செல்லப்பட்டு முகம் மேலே பார்த்திருக்கத்தக்கதாக படுக்கவைக்கப்பட்டேன். அவர்களில் ஒருவன் எனது வயிற்றில் ஏறித் தொங்கித் தொங்கிக் குதித்தான். சுமார் 15 நிமிடங்கள் இப்படி வயிற்றில் ஏறிநின்று குதித்தான்.

பின்னர் என்னைக் குளியலறைக்கு கூட்டிச் சென்று என்மீது தண்ணீர்

www.tamilarangam.net

பாய்ச்சினார்கள். இவ்வளவும் செய்து முடித்தபின் நான் முன்பு போட்டிருந்த காற்சட்டையையும், வேறு ஒரு சேட்டையும் தந்து அணிந்துகொள்ளச் சொன்னார்கள். நான் அணிந்து கொண்டேன். சித்திரவதை செய்யப்பட்ட இடத்தில் நான் உட்கார வைக்கப்பட்டேன்.

அதேநாள் சுமார் 6 மணிக்கு இந்திய இராணுவத்தினர் சிலர் வந்து எனது வயிற்றிலிருந்த போத்திலை எடுக்க முயற்சிசெய்தனர். அவர்களால் முடியாமல் போகவே, என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகும்படி ஈ.என்.டி.எல்.எவ்வைச் சேர்ந்தவர்களுக்கு இராணுவத்தினரில் ஒருவன் கூறினான்.

அவர்கள் என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும்போது, எனக்குச் செய்த சித்திரவதைகளை யாருக்காவது சொன்னால் என்னைக் கொல்வதுடன், எனது முழுக்குடும்பத்தையும் அழிப்போம் எனமிரட்டினார்கள்.

கை எஸ் வான் ஒன்றில் ஏற்றப்பட்டு நான் ஆஸ்பத்திரிக்குகொண்டுவரப்பட்டேன்.

ஆஸ்பத்திரியில் யாரிடமும் அவர்கள் என்னை ஒப்படைக்கவில்லை பதிலாக என்னை ஒரு தள்ளுவண்டியில் ஏற்றி முகப்பு வாசலுக்கு தள்ளிவிட்டு மறைந்துவிட்டார்கள்

என்னைக் கண்ட ஒருவர் வைத்தியரிடம் என்னை அழைத்துச் சென்றார்.

நான் வாட்டில் அனுமதிக்கப்பட்டேன். அறுவைச் சிகிச்சையின்பின் எனது வயிற்றிலிருந்த போத்தல் எடுக்கப்பட்டது.

சிகிச்சைக்காக நான் சுமார் ஒன்றரை மாதங்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தேன்.

ஆஸ்பத்திரியில் என்னுடன் எனது தந்தை தங்கியிருந்தார். ஒரு நாள் நடுச்சாமம் அளவில் 15 இந்திய இராணுவத்தினர் வந்து எனது தந்தையைக் கூட்டிச்சென்றார்கள்.

அவர் 4 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார். அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது எனக்கு நடந்த சித்திரவதைகளைப் பற்றி யாருக்காவது சொன்னாரா?என்று கேட்கப்பட்டார்.

19வயது இளைஞன் ஒருவனுக்கு ஈ.என்.டி.எல்.எவ் பாசிசக் கும்பல் செய்த மிருகத்தனமான சித்திரவதைகள் பற்றி அவ்விளைஞனால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து சேகரித்தவைகளைத் தொகுத்திருக்கிறோம் அந்த இளைஞன், அவனின் குடும்பத்தினர் பாதுகாப்புக் கருதி இளைஞனின் பெயர், கொண்டு செல்லப்பட்ட இடம், சிகிச்சையளிக்கப்பட்ட இடங்கள் போன்ற

(தொடர்ச்சி 10ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னம்மா கண்ணுகளா......

கடாரம் வென்ற பின்
கடல் கடந்து வந்தாலும்
விடாத தமிழனின்
வீரத்தின் எச்சங்கள்
சந்திரனின் வாழ்வதோர்
சாத்தியமானால் அங்கும்
தந்திரமாய் குடியேறி
தடியடிகள் செய்குவோம்!
இளைத்த ஒருவனை
இருபது பேர் சேர்ந்து தள்ளி
விழுத்திப் பிடிக்க
வீரத் தமிழ்மறவன்
சப்பாத்துக் கால்களால்
சரியான இடங்களிலே
தப்பாது தாக்கித்
தமிழ்மானம் காத்தான்!
வெற்றிக் களிப்பில்
வீரஉலா வருவோம்.
கற்றறிந்த பேயரெல்லாம்
கத்திவிட்டுப் போகட்டும்
பேனாப் பிடித்த
பெரும்பேயர் எல்லாரும்
வீணாய் முதுகு
வீங்கிப்போய் விடுவார்கள்
சமாதானம் அன்பு
சகோதரத் துவமென்போர்
அமாவாசை இருட்டில்
அவதரித்த விடுபேயர்

www.tamilarangam.net

சத்தியமாய் எங்கள்
சான்றிதழ்கள் வருமாறு:-

கத்திக் குத்துக்
கற்றவனோர் பீ.எச்.டி.
போத்தில் உடைத்துப்
பொருதுபவன் பீ.எஸ்.சி
சாத்தத் தெரிந்தவனே
சரியான எம்.எஸ்.சி
சொல்லிப் புரிவதெல்லாம்
சுத்தமாய்த் தெரியாது
பல்லை உடைப்போம்
பயனில்லை என்றாலோ
மண்டை உடைப்போம்,
மரணமும் நேரலாம்...!
சண்டையென்று வந்தால்
சரித்திரங்கள் நாம்படைப்போம்!
இந்தச் சமூகத்தின்
இணையற்ற பிரதிநிதி
மந்தைக் குணமென்ன
மறந்துதான் போய்விடுமோ?
பண்டைத் தமிழனின்
பாரம் பரியங்கள்
மண்டை உடைப்பதால்தான்
மகத்துவம் பெறுகிறது.
ஆகவே எல்லோரும்
அவனவனின் பங்குக்கு
வேகமாய் மண்டைகளை
வென்றெடுங்கள்! விட்டாலோ
உடைப்பதற்கு மண்டைகளே
இல்லாது போய்விடலாம்!

www.tamilarangam.net

மடத்தனமாய்த் தமிழன்
மண்டை ஓட்டுக்குள்
என்ன சமாச்சாரம்
இருக்கிறதென் றாராய்ந்து
கன்னித் தமிழைக்
களங்கப் படுத்தாதீர்.
வீரத் தமிழன்
விழுமியங்கள் காக்கவெனில்
ஆரையாதல் பிடித்து
அடித்து நொருக்குங்கள்!
உடைத்த பரம்பரை
மீண்டும் ஒரு முறை
உடைக்க நினைப்பதில்
என்ன குறை....?

- ஆனந்த் பிரசாத் -

## நிகழ் கால போராளிகள்

எதிரிக்கு எதிராக
ஏந்திளேம் துப்பாக்கி
பின்
மூளை நோய்வாய்பட்டது
இப்போ யாருக்கு எதிராக
என்று புரியவில்லை
புரிந்த வரை புரிகிறோம்
சுடுசி
பேதம் இல்லாமல்.

-ராஜ்-

கனடாவிலிருந்து வெளிவரும் 'தேடல்' சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# நிகராகுவாப் புரட்சி

__புரட்சிகர அரசை எதிர்த்து எதிர்ப்புரட்சிகர சக்திகள்.__

நிகரகுவாவில் புரட்சிகர அரசு ஏற்பட்டது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குப் பேரிடியாக விழுந்தது. நிகரகுவாவின் புரட்சிகர அரசிற்கு எதிராக அமெரிக்கா எதிர்புரட்சி நடவடிக்கையில் இறங்கிவருகிறது.

1979இல் நிகரகுவாவில் ஏற்பட்ட புரட்சிகர அரசு அண்டைநாடுகளுடன் நல்லுறவை விரும்பியது. ஆனால் கொண்டுராஸ் மட்டும் நிகரகுவாவின் அமைதிப் பேச்சுவார்த்தை முயற்சிகளைப்

பொன். தனசேகரன்

புறக்கணித்து வருகிறது. எல்லைகளில் படை விலக்கம் செய்வது தொடர்பாக நிகரகுவா தெரிவித்த யோசனைகளை கொண்டுராஸும், கொஸ்ரறிக்காவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலால் நிராகரித்துவிட்டன.

1981இல் றீகன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் நிகரகுவாவிற்குத் தொல்லைகள் மேலும் அதிகமாயின. நிகரகுவாவிற்கு வாக்குறுதியளித்த 75கோடி டொலர் உதவியை றீகன் நிறுத்தினார்.

நிகரகுவா அரசைக் கவிழ்க்க கொன்ராஸ் (Contras) என்ற கூலிப்படையை அமெரிக்க அரசு உருவாக்கி அதற்கு நிதியுதவியும், ஆயுத உதவியும் அளித்துள்ளது. இக் கூலிப்படைக்கு சி. ஐ. ஏ. ஏஜென்டுகள் இராணுவப்பயிற்சியளித்து வருகின்றனர். கொன்ராஸ் கூலிப்படைக்காக 1981 முதல் 1984வரை அமெரிக்க ஏகாதிபத்தியம் 80கோடிடொலர் தொகையை வழங்கி புரட்சிகர அரசைக் கவிழ்க்கத்தூண்டிவருகிறது.

கொன்ராஸ் கூலிப்படையினர் 1984 ஜூலை மாதத்தில் மட்டும் 2,311 நிகரகுவாமக்களைக் கொன்று குவித்துள்ளனர். 3,720க்கும் மேற்பட்டவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இவர்கள் 130கோடி டொலருக்கு மேற்பட்ட நிகரகுவா நா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டின் சொத்துகளையும் நாசப் படுத்தியுள்ளனர்.

இந்த எதிர்ப் புரட்சிகர சக்திகள் கொண்டுராஸ் நாட்டில் தளம் அமைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள்.

எல்சல்வடோர் நாட்டில் புரட்சிகர கெரில்லாக்களுக்கு நிகரகுவா அளித்துவரும் உதவியை நிறுத்த வேண்டும் என்றும், உள்நாட்டில் அமெரிக்கா கூறுகிறபடி மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் 1981 இல் பேச்சுவார்த்தையின்போது – அமெரிக்க அரசு வலியுறுத்தியது. கொண்டுராஸ் நாட்டில் எதிர்ப் புரட்சிகர சக்திகளுக்கு அளிக்கப்படும் ஆதரவு நிறுத்தப்படுமா? என்பது பற்றி அமெரிக்கா உறுதிகூற மறுத்துவிட்டது. கடந்த 6 ஆண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியம் நிகரகுவாவிற்கு எதிராகப் படையெடுக்க எல்சல்–வடோர், கொண்டுராஸ், குவாற்றமாலா, கொஸ்ரறிக்கா ஆகிய நாடுகளுக்கு 3.55 மில்லியன் டொலர்வரை பண உதவி செய்துவருகிறது.

நிகரகுவாவில் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட சோமோசாவின் ஆதரவாளர்களை 'விடுதலை வீரர்கள்' என்று அழைக்கிறார் அமெரிக்க அதிபர் றீகன்.

நிகரகுவா மக்களுக்கெதிராக வன்முறையைத் தூண்டி விட 1982இல் 30கோடிடொலரும் 1983இல் 24கோடிடொலரும் 1985இல் 39கோடிடொலரும் அமெரிக்க அரசு செலவிட்டுள்–ளது.

1984இல் கொண்டுராஸ் நாட்டில் இயங்கும் அமெரிக்க கூலிப்படையினருக்கு சி.ஐ.ஏ ஏஜெண்டுகள் ரகசியப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர். நிகரகுவாவில் ஆட்சியாளர்களை எப்படித் தாக்கிக் கொல்ல வேண்டும் என்றும், நிகரகுவாவில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்றும் அதில் வழிமுறைகள் தெரிவிக்கப் பட்டிருந்தன.

வன்முறைமூலம் நிகரகுவா புரட்சிகர அரசைப் பலவீனப்படுத்துவது சி.ஐ.ஏ பிரசுரத்தின் நோக்கம்.

அமெரிக்கப் படைகள் நிகரகுவா எல்லைப் பகுதிகளில் அடிக்கடி இராணுவப் பயிற்சிகளை நடாத்தி நிகரகுவா அரசை மிரட்டி வருகிறது.

இராணுவ ரீதியாக நிகரகுவா அரசைப் பணிய வைக்க முடியாத அமெரிக்க அரசு 1985இல் பொருளாதாரத் – தடைகளை விதித்தது. நிகரகுவாவுடன் வர்த்தகத் தொடர்பை–யும் துண்டித்துக் கொண்டது. கோதுமை ஏற்றுமதியையும் நிறுத்தியது.

நிகரகுவாவின் கலப்புப் பொருளாதார நிலையைப் பயன்படுத்தி அமெரிக்க அரசு நிகரகுவாவிற்கு வழங்கிய கடன்உத

www.tamilarangam.net

திகளை நிறுத்தியது. நிகரகுவாவிற்கு உலக வங்கி அளிக்க இருந்த கடன் உதவிகளை அமெரிக்கா தடுத்து நிறுத்தி விட்டது. இது தவிர 1983இல் நிகரகுவாவிலிருந்து 90சதவீதம் சீனி இறக்குமதி செய்வதையும் நிறுத்திவிட்டது. நிகரகுவாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அமெரிக்கா தடை விதித்ததன் மூலம் நிகரகுவாவிற்கு கடுமையான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திவருகிறது.

நிகரகுவாவின் மூல வளங்களையும், உள் கட்டுமானத்தையும் கொன்ராஸ் திட்டமிட்டு அழித்து வருகிறது. மருத்துவர்களை, ஆசிரியர்களை, செவிலியர்களை, தொழில் நுட்ப வல்லுனர்களைக் குறிவைத்துக் கொல்லுகிறது. நிகரகுவா தனது தேசிய வருவாயில் 75சத விகிதத்தை நாட்டுப் பாதுகாப்புக்காகச் செலவிட வேண்டியுள்ளது. ஏராளமான உயிர்ச் சேதங்களுக்கிடையே மிகப் பெரும் ஏகாதிபத்தியத்தின் அனைத்துவகை அச்சுறுத்தல்களை எதிர்த்துக் கொண்டு கோலியாத் என்ற இராட்சசனை எதிர்த்துப் போராடும் தாவீது என்ற சிறுவனை அவதரித்துள்ளது நிகரகுவா.

1930களில் ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரில் குடியரசுவாதிகள் பக்கம் நிற்பதா?பாசிசவாதிகள் பக்கம் நிற்பதா?என்ற கேள்வி உலக மக்களுக்கு விடுக்கப்பட்டதுபோல் இன்று உலகின் முன் உள்ள கேள்வி: நீங்கள் யார் பக்கம்? நிகரகுவா புரட்சி அரசாங்கத்தின் பக்கமா?அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியம் பக்கமா? நடுநிலை வகிப்பதோ, கேள்வியையும், பதிலையும் வேறுவிதமாகத் திசை திருப்புவதோ அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குதரும் ஆதரவுதான்.

*

இக் கட்டுரைத்தொடர் இந்தியாவிலிருந்து வெளிவந்த 'பரிமாணம்' என்ற சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

---

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

விபரங்களைத் தவிர்த்துள்ளோம்.

இப்படியான சித்திரவதைகள் இக் கும்பலினால் மட்டுமல்ல இங்குள்ள அனைத்துப் பாசிச இயக்கங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பாசிசவாதிகளின் மிருகத்தனங்களுக்கு மத்தியில்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடூர நிலையைப் புரிந்துகொண்டு இவற்றுக்கெதிராகச் செயற்பட வேண்டுமெனமனிதாபிமானிகள் அனைவரையும் கேட்கிறோம்.

இலங்கையிலிருந்து...

- நமது நிருபர்கள் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்க்ஸிஸம் வேண்டாம்!

பதில்கள் - யோகநாதன்-

கேள்விக்குரியவர்களின் விபரங்கள் முக்கியத்துவமின்மை கருதித் தவிர்க்கப்பட்டுள்ளன ஒருவர் இப்பகுதிக்கு எத்தனை கேள்விகளையும் அனுப்பி வைக்கலாம்.

*சமூக விஞ்ஞானம் என்றால் என்ன?*

உயிரியல், பௌதிகம், இரசாயனம் என்று இயற்கை விஞ்ஞானத்தைப் பிரிவுகளாகப் பிரித்துள்ளதுபோல் இவற்றுடன் கூடவே மனித சமூகத்துடன் இணைந்திருக்கும் பொருளியல், சரித்திரம், உலகம் பற்றிய அறிவு, குடிகள் பற்றிய அறிவு போன்றவையும் சேர்ந்து சமூக விஞ்ஞானம் எனப்படும்.

*அன்பு, பாசம், நேசம் எல்லாம் போலி என்று சொல்கிறார்களே சில மார்க்ஸிட்டுகள். இதன் அர்த்தம் என்ன?*

ஒரு மனிதரிடம் இருக்க வேண்டிய தகுதி என்னவெனில் - மனித நேயம் என்றே சொல்லலாம். அதாவது பிறர் மீது அவர் காட்டும் அன்பு -அல்லது நேசம் என்பதே. இத் தகுதி மனித வாழ்வை நிர்ணயிக்கும் - உண்மையான காரணிகளைக் கவனத்தில் எடுத்திருக்குமாயின் அதுதான் மிகச் சிறந்த நேயம் - எனப்படும்.

உதாரணமாக வீடு, வளவு நகை, நட்டு என்ற 'புறக்காரணிகளின்' தாக்கம் எதுவுமில்லாது நேசிக்கும் தகுதியுள்ள - ஒரு இளைஞனும், ஒரு யுவதியும் சந்திக்கும்போதுதான் உண்மை-யான காதல் கூட ஏற்படலாம். இன்றைய 'சினிமாக் காதல்கள்' இந்தத் தகுதியைப் பெறுவதில்-லை.

எனவே 'மனித நேயம்' என்பது போலியானதல்ல. எமது 'பாரம்பரிய' இலக்கியங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதல், வீரம், பாசம், கற்பு, கொடை, தியாகம், பக்தி, வாய்மை, நற்பண்பு, நேர்மை, ஒழுக்கம், அதிஷ்டம் போன்ற சொற்கள் அவசியத்திற்கு அதிகமாகவும், அர்த்தமற்றும் புழக்கத்தில் விட்ட தவறும் கூட மனித நயத்திற்கு பிழையான அர்த்தம் ஏற்படக் காரணங்களாகும்.

பொதுவுடமை என்றால் என்ன?

உடைமைகளைப் பொதுவில் வைத்தல் என்று அர்த்தப்படும். ஆனால் இன்று இது 'கொலைவெறி', 'கூண்டோடு எரித்தல்' 'சுதந்திரத்தைப் பறித்தல்' என்றெல்லாம் முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாதிகளாலும், அவர்களுடைய அடிவருடிகளாலும் சித்தரிக்கப்பட்டு வருகிறது.

'உற்பத்தி ஊற்றுக்கள் ' என்று சொல்லப்படும் நிலம், மூலதனம், தொழிற்சாலை போன்றவை பொதுவில் வைக்கப்பட்டு, அவற்றினால் பெற்றுக்கொள்ளும் வருமானத்தையும், வேலைப்பளுவையும் சமரீதியில் பங்கிடுதல் எனும் நியாயமான அம்சங்கள் அடங்கியதே பொதுவுடமை ஆகும்.

இன்னொருவிதமாகச் சொல்லுவதானால் இருப்பவனிடம் இருந்து பறித்துப் பிடுங்குவது என்பதைவிட பள்ளங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளல், எல்லோரது அத்தியாவசிய தேவைகளும் பூர்த்தி செய்யப்படுதல் என்பது பொருத்தமானதாகவிருக்கும்.

'மேற்கு ஜேர்மெனியில் சில இலக்கிய முயற்சிகள்' என்ற தொடராக்கம் ஆக்கதாரருக்குரிய தவிர்க்கவியலாத காரணத்தால் எமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. கிடைத்ததும் பிரசுரமாகும்.

— கடலோடிகள்.

முதலாமவர்: என்ன சிரிக்கிறீர்?

இரண்டாமவர்: இல்லை. பக்கமில்லை, பக்கமில்லையெண்டு சொல்லி இப்ப ஆசிரிய தலையங்கத்துக்கே இடமில்லாமப் போச்சாம்.

முதலாமவர்: ? ? ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைக்கு வெளியேயும் தொடரும் இயக்க அராஜகங்கள்.




WITH A LIVE SHOW?

இலங்கையிலிருந்து வெளியாகும் 'சன்' ஆங்கிலத் தினசரியின் 17.10.89பதிப்பில் வெளியான கேலிச் சித்திரம்.

நோர்வேயில் இருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவாளர்களால் ஒஸ்லோ நகரிலுள்ள, கிறிங்ஷோ .மாணவர் விடுதியில் 15.10.89 பிற்பகல் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக் கூட்டத்திற்கு சுமார் 35 பேரளவில் வந்திருந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களாவர்.

கூட்டம் ஆரம்பிக்க ஆயத்தமாகையில் அங்கு வந்திருந்த எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களில் ஒருவர் மேடைக்கு வந்து "இலங்கையில் இந்திய இராணுவத்தாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வாலும் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்துவோம்" என்று கூறினர். இதனைத் தொடர்ந்து அனைவரும் மௌன அஞ்சலி செய்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனையடுத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவர் பேச ஆரம்பிக்கையில் மேடைக்கு வந்த எல்.ரி.ரி.ஈ உறுப்பினரால் தாக்கப்பட்டார். தொடர்ந்து அங்கு வந்திருந்த எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் அனைவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களைத் தாக்கினார்கள். தாக்கியவர்கள் மிளகாய்தூள் வீசியதுடன் அங்கிருந்த தளபாடங்களினாலும் தாக்கினார்கள்.

ஏற்கெனவே ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த எல்.ரி.ரி.ஈயைச் சேர்ந்த ஒருவர் இத்தாக்குதல்களை வீடியோக் கமராவினால் பதிவு செய்தார். புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

சுமார் ஆறு, ஏழு நிமிடங்கள்வரை இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. இவற்றின்போது ஏற்பட்ட ஆரவாரங்களினால் அம்மாணவர் விடுதியைச் சேர்ந்த மாணவர்களும், விடுதிப் பொறுப்பாளரும் பொலிசுக்குத் தகவல் அனுப்பினார்கள். பொலிசார் வருவதற்குள் தாக்கியவர்கள் ஓடி மறைந்துவிட்டார்கள். காயமடைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இக் கூட்டத்திற்குச் செல்லக் கூடாதென ஏற்கெனவே - எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் - மாணவர்களைத் தொலைபேசியில் மிரட்டியதும், தங்கள் தாக்குதல்களைப் படமாக்க வீடியோ சாதனங்களுடன் வந்திருந்ததும், இச்சம்பவம் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களின் திட்டமிடப்பட்ட செயல் என்பதையே காட்டுகின்றன.

இச் சம்பவம் நடைபெற்ற இரண்டு தினங்களின் பின், இச்சம்பவங்களை வீடியோவில் படம்பிடித்தவர் வீட்டில் வைத்து முகமூடியணிந்தவர்களால் தாக்கப்பட்டார்.

இலங்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினால் மேற்கொள்ளப்படும் அராஜகங்களை கருத்துரீதியாக அம்பலப்படுத்தாமல், எதிர்கொள்ளாமல், வேற்றுநாடொன்றில் வைத்து நிராயுதபாணிகளாயிருந்தவர்கள்மேல் தமக்கேயுரிய விதத்தில் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்ட எல்.ரி.ரி.ஈயின் அடாவடித்தனமும், மக்களே தாக்கினார்கள் - என்று 'மக்கள்' மேல் பழியைப் போடும் அவர்களின் அரசியல்-விபச்சசிரமும் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இலங்கைக்கு வெளியேயும் தங்கள் அராஜகங்களைக் கட்டவிழ்த்துவிடும் இயக்கங்களுக்கெதிராக, அவைகளின் அராஜகங்களை முறியடிக்க நாம் ஐக்கியப்பட்டு இயங்க வேண்டும்.

நோர்வேயிலிருந்து...

நமது நிருபர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# நான் ஏன் அழவேண்டும்?

இரவின் மடியில் குருதி பாந்தபடி குற்றுயிராக வீழ்ந்து கிடக்கிறது அந்தக் கிராமம். அவலத்தில்... அச்சத்தில் மூச்சுவிட மறந்த ஜனங்கள். ஒருசில பனையோலைகள் மாத்திரம் அங்கு காற்றோடு சரசமாடிக்கொண்டிருந்தன.

அகதிகளை அளவுக்கதிகமாக உள்வாங்கிய அஜீரணத்தால் அக் கோயில் துடித்துக்கொள்ள...

செறிந்து கிடந்த ஜனங்களுக்குள்ளே ஓர் மூலையில் முடங்கிக் கிடந்தாள் ராணி. தூணொன்றோடு தன்னைச் சாத்தியபடி நின்றிருந்த நல்லம்மாவின் கன்னத்தில் கண்ணீர் உப்புக் கோடுகள்.

தாகத்தினால் தவித்த குழந்தைகளைச் சமாதானப்படுத்த முடியாமல் தாய்மார் அங்கு தவித்துக் கொண்டிருந்தனர்.

நடுநிசி நெருங்கியும் எந்தக் கோழியும் கூவவில்லை. துப்பாக்கி, பீரங்கி வெடிகளால் , அவை கூடக் கிலி கொண்டிருந்தன.

அன்றைய நிகழ்வுகள் ராணியின் சிந்தனை நாடாவில் மீண்டும் மீண்டும் மீள் ஓட்டம் செய்கின்றன.

இராணுவத்தினரால் அன்று அங்கே நடந்த கொடுமைகள்தான் எத்தனை? அயலவர், இனத்தவர், தெரிந்தவர் என்று எத்தனை பேருடைய இழப்புகள் அவள் நெஞ்சை ஒரே நாளில் சிதைத்துவிட்டிருந்தன.

## சி. பாலன்

தெரிந்த முகங்களின் பரிதாபமான சாவுகள் ராணியின் இதயத்தை நெருடியதே ஒழிய அவள் தனக்காக, தன்னுடைய நிலைமைக்காக, தனக்கு நேர்ந்த கதிக்காகப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அவனின் தாய் அவ னிற்காகக் கொட்டிவிட்ட கண்ணீரைக் கடற்பரப்புகளே ஏற்க மறுத்தன. ஊராரின் அனுதாபம் ஒவ்வொன்றும் ஒரு துளி நீரானல் அவள் சகராவையே சமுத்திரமாக்கியிருப்பாள்.

"ஐயோ.. என்னமாதிரி இருந்த பிள்ளையை இப்பிடி நரகத்தில தள்ளிப்போட்டுப் போட்டாங்களே ஆமிக்காறப் படுபாவியள்..இனி உன்ரை வாழ்க்கை என்னுகப் போகுது.."

அயலவர்,இனத்தவர்ராணியைப் பார்த்து ஒப்பாரி வைத்தனர்.

'நான் என்ன அவையள் சொல்லுற சொர்க்கம்.. அதிலயா வாழ்ந்தனுன் அப்பிடியே நரகத்தில தள்ளுறதுக்கு..' அவளுடைய மௌனம் பேசிக் கொண்டது.

ராணிக்கு ஏற்பட்ட சம்பவத்தை அறிந்தவர்கள் எல்லோரும் அவளைக் கண்டவுடன் ஆமிக்காரனுக்கு வாயால் வேட்டு வைத்துவிட்டுப் போனுர்கள்.ஊர்காரர்கள் அவளுக்காக வருந்திய வருத்தமோ அல்லது ஆமிக்காரர் மேல் அவர்கள் கொண்ட கோபமோ அல்லது அவர்கள் சொன்ன ஆறுதல் வார்த்தைகளோ அவளிற்கு அர்த்தமற்றவையாகவே தெரிந்தன. அவை போலி வார்த்தைகளும், நீலிக் கண்ணீருமாகவே அவளிற்குத்தென்பட்டன.

ஜன வெப்பத்தினுல் முகத்தில் வழிந்த வேர்வையை ராணி விரல்களால் வழித்தெறிந்தபோது...

"இத்தினை வயதுக்குமேல உனக்கு இனி கலியாணமே?குடும்பமா?குழந்தையா?"

மூக்கோடு போட்டிபோட்டு முந்திக்கொண்ட முக எலும்புகள் அவளிடம் கேள்வி கேட்டன.

ஆம்...

அவள் இளமை அழகோடு கை கோர்த்த அந்தக் காலங்கள்... அவளுடைய பருவமும் தன்னுடைய தேவைகளுக்கு விண்ணப்பம் கொடுத்தது.

வீட்டில் மல்லிகைப் பூக்கள் பூத்துக் குலுங்கியபோது.. மெல்லிய தென்றல் அவள் உடலை வருடிச் செல்லும்போது.. அயல் வீட்டுப் பெண்கள் திருமணம் செய்துகொண்டபோது...

அவளும் தனக்குள் எத்தனையோ ஆசைகளைச் சிறகடிக்கவிட்டு... அவை நிறைவேறும் நாளை எதிர்பார்த்துக் கிடந்தாள்.

ஆனல் காலம் செல்லச் செல்ல...

அவள் கனவுக் கடலில் மிதந்துவந்த கல்யாணப் படகு மெல்ல மெல்லக் கவிழ்ந்து இறுதியில் மூழ்கியே விட அவள் விழித்தபோது...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றிரண்டு வெண்மயிர்கள் காதிற்குள் கதை சொல்லத் தொடங்கியிருந்தன.

சீதனப்படுகுழியில் அவள் கல்யாண வாழ்க்கையும் கொலைசெய்யப்பட்டுவிட்டபின்...

நாலு பரப்பு வளவு அவள் நாற்பது வயதுவரை கண்ட உலகம். அந்த வீட்டு வளவினுள் எந்த மூலையில், எந்த மாதத்தில் எந்தப் பூண்டு முளைக்கும் என்பது அவளிற்கு நன்றாகத் தெரியும்.

நாளும் நாளும் பார்த்து அலுத்துப் போன அந்த உலகினுள் ஏதாவது வித்தியாசமானதாகப், புதுமையானதாக இருக்காதா என்று தேடிப் பார்ப்பதுண்டு.

வானத்தில் போகும் முகில்கள் கலர் கலராகப் போகாதா? சீ.. எப்போதுமே கறுப்பும் வெள்ளையுமாக ... அண்ணாந்து வானத்தைப் பார்க்கும்போதெல்லாம் சலித்துக்கொள்ளுவாள்.

வாழ்க்கையில் மாறுதலை தேடிய அவள் மனதில் ஆற்றாமையினால் எழும் விபரீத ஆசைகள் இப்படிப் பல.

கோவிலின் ஓர் மூலையில் ஏற்றப்பட்டிருந்த சுட்டி விளக்கு தன்னால் இயன்ற மட்டும் இருளை விரட்டிக் கொண்டிருந்தது. தொடர்ந்து உதவிக்கு வந்த சூரியக் கதிர்கள் இருட்டை ஒத்திக்கொள்ள...

காக்கைகள் ஆரவாரித்து நிலத்தை நோக்கி இறங்கின. மனிதங்களை இரையாக்கி தெருக்களிலே படைத்துவிட்டு.. நேற்றைய பொழுதே காக்கைகளையும், நாய்களையும் விருந்திற்கு அழைத்திருந்தது இராணுவம்.

எங்கோ ஓர் மூலையில் நாய்கள் அடிபட்டுக் கொண்டிருந்தன.

மூலஸ்தானத்திற்கும் பரிவாரமூர்த்தி மண்டபத்திற்கும் இடையாக ராணி வானத்தைப் பார்த்தாள். கோவில் சுட்டுவிளக்குப் போல் ஒரு நட்சத்திரம் மட்டும் விட்டுவிட்டு மின்னிக்கொண்டிருந்தது.

இழப்பவை எல்லாம் இழந்தாகிவிட்டது. உயிராவது எஞ்சுமா? என்ற அச்சம் அங்கிருந்த ஒவ்வோர் இதயத்தையும் உலுப்பிக் கொள்ள...

இரவு முழுவதும் கண்இமைக்க மறைந்த பலநூறு கண்களும் இருளகலும் அறிகுறியில் சற்றுப் பய உணர்வு அகன்று பிரகாசமாகின. ஒன்றுமறியாத குழந்தைகள் மட்டும் ஒட்டிய சருகாக நிலத்திலே தூங்கிக்கொண்டிருந்தன.

தாகத்தினால் நாக்கு வறண்டுவிட கோவில் கிணற்றை நோக்கி மெல்ல நகர்ந்தாள். ராணி.

கிணற்றை அண்மித்ததும்..

www.tamilarangam.net

"ஐயோ எங்கயடி போறாய்? நில்லடி..." என்றலறியபடி பின்னாலே ஓடிவந்தாள் நல்லம்மா.

ராணி எதுவும் விளங்காது திடுக்குற்று நின்றபோது...

"ஐயோ பிள்ளை அவசரப்பட்டு உயிரை மாய்ச்சுப்போடாதையடி" அவளை இறுகப் பற்றிக்கொண்டே கெஞ்சினாள் நல்லம்மா.

"என்ன?பைத்தியமே உனக்கு? நான் ஏன்..."

"ஊர்ச் சனம் சிரிக்குமெண்டு..." நல்லம்மா முடிக்காது தடுமாறினாள்.

"என்னைப் பாத்து சிரிச்சு சந்தோசப்படுவினம் எண்டால் அவை கொஞ்ச நேரம் சந்தோசமாய் இருந்திட்டுப் போகட்டும். அதுக்காக தற்கொலை செய்ய நான் பைத்தியக்காறியே. கொஞ்சம் தண்ணி விடாயாய் இருந்தது. அதுதான் தண்ணி குடிப்பம் எண்டு வந்தனான்."

இப்போதுதான் நல்லம்மாவுக்கு ஆறுதல் வந்தது.

நேற்றைய நிகழ்வுகள் – எந்த ஒரு தாயாலும் ஜீரணிக்க முடியாதவைதான் என எண்ணிக் கொண்ட ராணியின் மனத்திரையில் அந்தச் சம்பவம் மீண்டும் படமாகியது.

அன்று...

கடமையில் இரண்டு மணி நேரச் சேவையை முடித்திருந்தது சூரியன்.

வேட்டுச் சத்தங்கள் அருகே கேட்டு விரைவாகவே அண்மித்துக் கொண்டிருந்தன. கண நேரத்தில் அக் கிராமத்தினுள்ளும் கொடிவிட்டு வந்தன அந்த கொலைகார வாகனங்கள்.

ஆமிக்காறர்...

கண் இமைத்த நேரத்தில் சிதறி ஓடிய சைக்கிள்கள், உயிரைக் கையிலேந்தியபடி திக்குத் தெரியாமல் ஓடிய ஜனங்கள்.. ஐயோ! என்ற அவலக் குரல்கள்.. மரண ஓலங்கள்...

ராணியும் தாயைக் கையிற் பிடித்தபடி வீட்டு வாசற்படியைத் தாண்டும்போது...

எதிரே வந்தன காக்கி உடைக் கும்பல்கள்.

தாரை, தப்பட்டைகள் – எல்லாம் ராணியின் இதயத்துள் தன்னிச்சையாகவே முழங்கின.

நல்லம்மாவை அந்தநாய்கள் தள்ளிவிட்ட பாங்கும், அவள் வீதி ஓரம் வீழ்ந்ததும் ராணிக்கு உயிரைத் தொட்ட நேரம்...

ராணியை இறுகப் பற்றி தோளில் போட்டு திமிறத்திமிற இறுக்கியபடி ஒருவன் வீட்டுக்குள் கொண்டு சென்றான்.

அவசரத்தில் திறந்தபடியேவிட்டு வந்த கதவு அவனுக்கு தடையாக இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதானத்திற்காகப் — போராடவந்த காந்திய நாட்டுச் சிப்பாய் நன்றாகவே களைத்துவிடும்வரை ராணி இரையாக்கப்பட்டாள்.

வீட்டின் ஓர் மூலையில் கிழிந்த துணியாக விழுந்துகிடந்தாள் ராணி. ஒவ்வொரு நிமிடமும்.. இன்னும் யாராவது வந்துவிடுவார்களோ...உயிரே போய்விடுமோ.. என்ற பயம் குமட்டிக் கொண்டிருந்தது.

எழுந்திருக்க அவள் உடலில் வலிமை குன்றியிருந்தது.

உயிரை இழக்கவில்லையே என்பது அந்தப் பொழுதில்அவள் நிறைவானாலும்...

இழந்துபோனது சமுதாயத்தால் கௌரவிக்கப்படும் பெண்மைக்குரிய தன்மை... ராணியின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டியது.

அழுது முடித்தபின் அழுகைக்கான அர்த்தம் எதுவுமே அவளுக்குப் புரியவில்லை.



நன்றி: மங்கை

www.tamilarangam.net

பள்ளிக்கூட நாட்களில் — ...த்தனை கடைக்கண் பார்வைக ...ர். அவற்றை எதிர்கொண்டாலே ...ற்பிற்குப் பங்கம் ஏற்பட்டு ...டும் என்ற பயஉணர்வு அவளிற் ...தள்.

பொம்பிளைப் பிள்ளையள் ...ன்றால் இப்படித்தான் இருக்க ...வேண்டும் என்ற தாயின் வரைய ...றைக்குள் வார்க்கப்பட்ட அந்த ...பார்ப்பு தொடர்ந்து சிந்தித் ...தது.

இயல்பான உணர்வுகளை- ...யெல்லாம் கொலைசெய்து இந் ...த நாற்பது வயதுவரை நான் கட்டிக் காத்த கற்பு...

ஆசைத் திரி கொழுந்துவி ...ட்டெரிந்தபோதும் இத்தனைகா ...லமும் கரையாமல் பாதுகாத்த என்னுடைய கற்பு மெழுகு...

இவ்வளவு சாதனைகளுக்- காக எனக்குச் சமுதாயம் தந் ...த நற்சான்றிதழ் யாரோ ஒரு ...வனால் கிழிக்கப்பட்டுவிட்டது.

அவ்வளவுதானே...?

இந்தச் சாதனைகளோடு என் வாழ்நாள் போனதேயொ ...ழிய என் வாழ்விற்கு இந்தச் சாதனையும், இந்தச் சமுதாயச் சான்றிதழும் எதையும் தந்துவிட வில்லையே.

தந்தது என்ன...?

தனிமை..விரக்தி.. விர கம்...

எனவே இந்த இழப்பிற்- காக நான் ஏன் வருத்தப்பட- வோ அழவோவேண்டும்?

ராணி தாயையும் அழைத் துக்கொண்டு கோவில் மண்டபத் தை நோக்கி நடந்தாள்.

தங்கள் சோகங்களையும் மீறிய பரிதாப உணர்வோடும், பரிகாச உணர்வோடும் பல பார்வைகள் அவளைத் தைத்துக் கொண்டிருந்தன.

அவர்கள் யாரையும் சட் டைசெய்யாது ராணி மீண்டும்ஒரு தூணோடு தன்னைச் சாத்திக் கொண்டாள்.

நகருகின்ற நாட்களில்..

அவள் மறக்க முயன்றாலும் முடியாமல் அந்த நிகழ்வு அடிக் கடி அவளைத் தொந்தரவு செ ய்தது. அந்தப் பயங்கர உணர்வு இப்போது மெல்ல... மெல்ல ... அகன்று..

இனம்புரியாத உணர்வாக ...

தேவைப்படும் உணர்வாக ...

நினைக்கும் போதெல்லா ம் ஒரு தாகமாக...


இல்லை. வேண்டாம்..என அவள் உணர்வுகளிற்குத் தடை - போட முயன்றதுண்டு.

ஆனால்...

விரகத் தீயில் விறகாகி எரிந்தவள் மேல் விழுந்தது சாக்கடையா? சந்தனக்குழம்பா? என்று கூறுபோட அவள் உணர் ச்சிகள் தயாராக இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




02.10.89 (வீரகேசரி)

இலங்கை செலுத்தவேண்டிய மொத்த வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்களின் - தொகை 221,917 ருபாவாகும்.

03.10.89 (வீரகேசரி)

அநுராதபுரம் மாவட்டத்தில் பொலிஸ்-காரர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டால் புதிய தேர்தலை எதிர்நோக்கத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

"இதயசுத்தியுடன் புலிகள் அமைப்புமா-காணசபையில் சேர விரும்புமேயானால், மாகாணசபையைக் கலைக்க நாம்தயாராகவுள்ளோம். அத்துடன் புலிகளுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளவும் நாம் தயாராக உள்ளோம்" - ஈ.பி.ஆர்.எல்.எவ்

04.10.89 (வீரகேசரி)

"நாட்டின் 50சதவீதமான வளத்தை 10 சதவீதமானவர்கள் அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் பெரும்கிளர்ச்சிகள் இன்று தோன்றியுள்ளன" - பாராளுமன்றத்தில் சு.க.எம்.பி

பிரிட்டிஉத் இராணுவ நிறுவனமான பாதுகாப்புப் பயிற்சிகளுக்கான றோயல்கல்லூ ரியின் னா தக்குழு ஒன்று வெளிவிவகாரப், பாதுகாப்பு, பதில் அமைச்சரைச் சந்தித்து. இக்குழுவில் அமெரிக்கா, இத்தாலி, கனடா, ஸ்பெயின், ஜேர்மெனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 இராணுவ அதிகாரிகள் அடங்கியுள்ளனர்.

"சர்வகட்சி மகாநாடு யதார்த்தரீதியில் ஓர் அகில இந்தியக் கட்சி மகாநாடேயாகும். இலங்கை சோசலிச முன்னணியைத் தவிர ஏனைய கட்சிகள் யாவும் இந்திய ஏகாதிபத்தியத்தினை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கின்றன. அவைகள் இந்தியாவின் இராணுவ மற்றும் நிதியுதவியில் தங்கியிருக்கின்றன. சர்வகட்சி மகாநாட்டின் நோக்கம் அதில் பங்குபற்றியவர்களுடன் தேசியஅரசு ஒன்றினை நிறுவி அவர்களுக்கு மந்திரிப் பதவி மற்றும் பொறுப்பான பதவிகளை வழங்கி, அதன் மூலம் சர்வதேச நாணய ஸ்தாபனங்களை ஏமாற்றி நிதியினைப்பெற்று சட்டவிரோத பாசிச நிர்வாகத்தினைத் தொடருவதாகும். ஐ.தே.கதலைவர்களோ அன்றிஇந்திய ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளான கட்சிகளோ சமாதானத்தினை ஏற்படுத்தவோ அல்லது ஐ

www.tamilarangam.net

னுயகத்தினை பாதுகாக்கவோ, மனிதஉ ரிமைகளைப் பாதுகாக்கவோ மாட்டா. இன்று படித்த இளைஞர்கள், உழைக்கும் வர்க்கத்தினர் போராடித் தமது உயிர்களை இழப்பது பிரேமதாசவிடம் இருந்து நிறைவேற்று அதிகாரத்தினைப் பறி

த்து சிறிமாவிடம் கொடுப்பதற்கல்ல . அவர்கள் போராடித் தமது உயிர்களைப்பறிகொடுப்பது இலங்கை-இந்தியசமாதான உடன்படிக்கையையும், மாகாணசபை முறையினையும் ஒழிக்கவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தன்னரசில் இருந்து நாட்டினை விடுவிக்கவும், இந்தியஆக்கிரமிப்புப் படையினை விரட்டியடிக்கவும் ஆகும்" - ஜே.வி.பி

05.10.89 (வீரகேசரி)

இலங்கை ருபாயின் மதிப்பினை பெருமளவு குறைக்குமாறு சர்வதேச நாணயச்சபை வற்புறுத்தி வருகின்றது.

06.10.89 (திசை)

யாழ் மருத்துவபீட உடற்கூற்றியல் துறை தலைவர் திருமதி ராஜினி திரணகம சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பைக் காட்டுமுகமாக ஒக்ரோபர் 1ஆம்திகதி யாழ் பல்கலைக்கழக மாணவர், ஊழியர்கள், ஆசிரியர்கள் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கியவண்ணம் கறுப்புத் துணியால் தமது வாய்களை கட்டியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

07.10.89 (வீரகேசரி)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து ஈரோஸ் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக ஈரோஸ்அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

"பாடசாலைகளில் சமயக் கல்விபோதிப்பதால் கிடைத்த பயன் எதுவுமில்லை. எந்த ஒரு பாடசாலையிலும் சமயக்கல்வி போதிப்பதை நிறுத்திவிடவேண்டும் . சமயத்தை அரச நிர்வாகத்திலிருந்தும் ஒதுக்கிவிடவும் வேண்டும். பாடசாலைகளில் சமுக விஞ்ஞானம் மற்றும் அவசியக்கல்விகளைப் போதிக்க வேண்டும்" பாராளு மன்றத்தில் வாசுதேவா.

கம்பளைப் பகுதியில் 31 சடலங்கள்கண்டெடுக்கப்பட்டன.

பேராதனை கலகா வீதியில் தலையில்லாத 15 முண்டங்கள் காணப்பட்டன.

06.10.89 (வீரகேசரி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பிரேமதாச எடுத்து வருவதாகவும், இரு தரப்பினருடனும் இது குறித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர்தெரிவித்தார்.

"ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு தேர்தலில் நிற்க நாம் தயாராக உள்ளோம்" - எல்.ரி.ரி.ஈ

"வடக்கு, கிழக்கில் புலிகளும் இந்திய இராணுவத்தினரும் இன்று கைகுலுக்கிக் கொள்கிறார்கள். திலீபனின் நினைவு தின வைபவத்தை நடத்திட இந்திய அமைதிப் படை முழுமையான ஒத்துழைப்பை நல்கியுள்ளது. இந்தியப்படையுடன் கைகுலுக்க முடியுமானால் சொந்தச் சகோதரர்களான தமிழர் குழுக்களின் போராளிகளுடன் ஏன் கைகுலுக்க முடியாது. எமக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைக்கு யாரும் ஒழுங்குகளை மேற்கொண்டால் அவர்களுக்கு நன்றிக்கடமைப்பட்டவர்களாக இருப்போம்" - ஈ.பி.ஆர்.எல்.எவ்

கண்டி, மாத்தளை, குண்டசாலைப் பகுதிகளி

www.tamilarangam.net

வில் 22 சடலங்கள் காணப்பட்டன.

09.10.89 (வீரகேசரி)

திருகோணமலையில் வைத்து டொக்ரர் ஞானசேகரனைக் கடத்திச் சென்றவர்கள் அவரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென்று ஈ.பி.டி.பி அறிக்கை வெளியிட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் 21பேர்இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுமாறுகோரி வெலிசறை தடுப்பு முகாமிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்து வருவதாகவும், 75 பல்கலைக்கழக மாணவர்கள் காணமல் போயுள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

10.10.89 (வீரகேசரி)

இலங்கையில் மனிதாபிமான சேவைகளை மேற்கொள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

"தமிழர்களும், சிங்களவர்களும் தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஒன்றுபட்டு கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டும். இனவாதத்தால் நாம் பிரிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டது போதும்"– உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவர்.

11.10.89 (வீரகேசரி)

இரத்தினபுரிப் பகுதியில் அரச பெருந்தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையின் 2 காவலர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 2 தொழிற்சாலைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

ஒக்ரோபர் 8ஆம் திகதிவரை 522 தபால் நிலையங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

12.10.89 (வீரகேசரி)

தமிழர் குழுக்கள் மத்தியில் ஒற்றுமையையும், இணக்கத்தையும் ஏற்படுத்துமுகமா[க] முக்கிய முயற்சிகள் கொழும்பில் இடம்பெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக வடக்கு–கிழக்கு முதல்வர் வரதராஜப்பெருமாளுக்கும், ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாருக்கும் இடையில் அதிவிசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

"1986ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 14பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 3பேர் இறந்துள்ளனர்"– சமூகநலன்புரி அத்தியட்ச[கர்]

24மணி நேரத்தில் நாடு முழுவதிலும் 40பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பொலிஸ் பகுதியில் எரிந்து கொண்டிருந்த 2 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

22.10.89 (வீரகேசரி)

இரத்தினபுரியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தகப்பன், மகன், மைத்துனர் உட்பட நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

23.10.89 (வீரகேசரி)

நாடு முழுவதிலும் படையினரால் 14[0] பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலையகத் தோட்டங்களை ஒன்றிணைத்து அறிமுகப்படுத்தப்படவிருக்கும் 'கொத்தணி' முறையை ஆட்சேபித்து உண்ணாவிரதம், பாத யாத்திரை நடாத்த மலையகமக்கள் முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிராந்திய அரசியலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமும்.

15.10.89இல் இலண்டனில் நடைபெற்ற விசுவானந்த தேவனின் நினைவு தினத்தில் இடம்பெற்ற உரையின் தொகுப்பு இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது. இத் தொகுப்பில் உள்ள கருத்துகள் சம்பந்தமாக நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சமுத்திரன் உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பார். உங்கள் கேள்விகள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 10.12.89.

— கடலோடிகள்.

எனது கருத்துகளை முன்வைக்கும் அதேவேளை சில விடயங்களை நான் தற்காலிக கருத்தாகவோ அல்லது இன்று மனதில் எழும் கேள்விகளாகவோதான் முன்வைக்க விரும்புகிறேன். அத்தகைய ஒரு அரசியல் சூழ்நிலையில்தான் இன்று நமதுநாடும், நமது மக்களும் இருக்கிறார்கள்.

இலங்கையின் தேசியஇனப் பிரச்சினை பல கட்டங்களுக்கூடாக இன்று ஒரு பிராந்திய அரசியல் வடிவத்தைப் பெற்றிருக்கிறது. இந்திய அரசு ஒரு நவீன வல்லரசாகக் கடந்த 40 வருடங்களாகப் பரிணமித்து வந்துள்ளது. கடந்த 10,15 வருடங்களில் இந்தப் பரிணமிப்பு மிகவும் துரிதமாக இடம்பெற்றுள்ளது.

இங்கு இந்திய மூலதனத்தின் குவியலும், இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் உருவாக்கமும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த மூலதனக் குவியலின் இயக்கப்பாட்டின் விளைவாக ஒருவித ஒருங்கிணைப்பும் அதே நேரத்தில் இதன் விளைவாகவும், வேறு பல அரசியல் காரணங்களாலும், வரலாற்றுக் காரணங்களாலும், இனப் பிரச்சினைக் காரணங்களினாலும் இந்த ஒருங்கிணைப்புக்கெதிரான ஒரு பிரிவினைப் போக்கும் இந்தியாவுக்குள் இருப்பதைக் காணலாம்.

## சமுத்திரன்

ஆயினும் இந்தியா என்ற ஒரு அமைப்பு இன்று யதார்த்த பூர்வமானது. இந்திய அரசு ஒரு நவீன முதலாளித்துவ அரசு என்பதும் யதார்த்த பூர்வமானது. இன்று உலகில் 7ஆவது முக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான பொருளாதார சக்தியாக இந்தியா இருப்பதும், இந்தியாவின் இராணுவம் உலகின் 4 ஆவது பெரிய இராணுவமாக இருப்பதும் அனைவரும் அறிந்த விடயங்களாகும்.

இந்திய உபகண்டத்தில் - இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளுக்குள்ளே இடம்பெறக் கூடிய பிரச்சினைகள், அவற்றின் தேசிய இனப் பிரச்சினைகள் தவிர்க்க முடியாதபடி இந்திய வல்லரசுடன் தொடர்புள்ளவையாகவே இருக்கின்றன. இதனால் இந்தியவல்லரசு எப்படித் தனது அண்டை நாடுகளுடன் உறவு வைத்துக் கொள்கிறது? எப்படி அண்டை நாடுகளில் இருக்கக்கூடிய உள்ளார்ந்தப் பிரச்சினைகளை தனது தேசிய நலன்களுக்காகவும்,

இந்திய ஆளும் வர்க்கங்களின் - நலன்களுக்காகவும் கையாள்கிறது? என்ற கேள்விகள் முக்கியமடைகின்றன. இந்தக் கேள்விகளை பார்க்கும்போது தெளிவடையும் சில பொதுப்படையான அம்சங்கள் தவிர வேறு சில அம்சங்களையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

1. இந்திய அரசு ஒரு நவீன முதலாளித்துவ அரசாகப் பரிணமித்துள்ள அதே நேரத்தில் மிகவும் நீண்ட காலமாக, பல்லாயிரம் ஆண்டுகளாக இந்திய உபகண்டத்தில் இருக்கக் கூடிய மக்கள், இனங்கள் இந்தியாவுக்குள் உள்ள மக்களுடன், மதங்களுடன், பிரதேசங்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்திருக்கிறார்கள். இதனால் இந்திய வல்லரசின் மேலாதிக்க - நோக்கங்களுக்கு இந்தக் கலாச்சாரத் தொடர்புகள், கலாச்சாரப் பண்புகள் பயனடைகின்றன.

இந்தியா பலவகையில்உபகண்டத்தில் மிகவும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடாகையினால் கலாச்சாரத்தை பண்டமயமாக்கி அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையில் இருக்கிறது. இந்தியாவுக்குள்ளே கணிசமான பூர்சுவா ஜனநாயகம் இருப்பதாலும், அங்கு கலைகளும் மற்றும் அறிவியல் ரீதியான விருத்திகளும் இடம் பெறக்கூடிய வாய்ப்புகள் இருப்பதினாலும் இந்திய முதலாளித்துவ அமைப்பு இவற்றைப் பண்டமயமாக்கி அண்டை நாடுகளுக்கு - ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த உறவானது அதாவது இது பொருளாதார, பொருளாதார உள்ளடக்கத்தைக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் மிகவும் கலாச்சார ரீதியானதும் ஆகும்.

உதாரணமாக, பாகிஸ்தானியர்கள் மத்தியில் பொதுவாக இந்திய எதிர்ப்புணர்வு ஆழமானது என்பது யாவரும் அறிந்ததே. அதே நேரத்தில் பாகிஸ்தானிய மக்கள் மிகவும் விரும்பி பார்க்கும் சினிமாக்களோ, விரும்பிக் கேட்கும் இசையோ இந்தியாவிலிருந்துதான் செல்கிறது.

இத்தகைய, இந்தக் கலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச்சார ரீதியிலான மேலாதிக்கத்தையும், இந்த உறவையும்நாம் மனதில் கொண்டிருக்கவேண்டும். இத்தகைய ஒரு கலாச்சார-

ரீதியான, சேதன ரீதியான உறவு முன்பு நம்மை அடக்கியாண்ட ஏகாதிபத்தியங்களுக்கோ, காலனித்துவங்களுக்கோ இல்லாதவை ஆயினும் இந்தியாவிற்கு இந்த அம்சங்கள் இருப்பது பலவகையிலும் மேலாதிக்கத்தை வலுப்படுத்துவதற்கு உதவுகிறது.

2. உதாரணத்திற்கு நமது நாட்டை எடுத்துக்கொண்டால், இலங்கை மீது இந்தியா எப்படி தனது மேலாதிக்கத்தை வலுப்படுத்துகிறது? மேலாதிக்கத்தை - நடைமுறைப்படுத்தக்கூடிய வழிவகைகளை எப்படிக் கையாள்கிறது? என்று பார்க்கும் போது நமது நாட்டுக்கு உள்ளே இருக்கக்கூடிய உள்ளார்ந்த தன்மைகள், நமது நாட்டின் உள்ளார்ந்த சமூக முரண்பாடுகள், இன வேறுபாடுகள், பொருளாதாரப் பிரச்சினைகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்தியா தனது மேலாதிக்கக் கொள்கைகளை குறிப்பிட்ட நாட்டுக்கேற்ப, குறிப்பிட்ட வரலாற்றுச்சந்தர்ப்பத்திற்கேற்ப வகுக்கிறதென்றே கூறவேண்டும்.

இந்தவகையில் நமது தேசிய இனப் பிரச்சினை இந்தியாவினுடைய மேலாதிக்க நலன்களுக்கு, இந்திய அரசின் பிராந்திய மேலாதிக்க செல்வாக்கை வலுப்படுத்துவதற்கு ஒரு கருவியாகப் பயன்பட்டுள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

இந்திய மேலாதிக்கத்திற்கும், நமது நாட்டின் உள்ளார்ந்த நிலைமைகளுக்குமான உறவைப் பார்க்கும்பொழுது சில அம்சங்கள் முக்கியமடைகின்றன.

முதலில் உள்ளார்ந்த அம்சங்களைப் பார்ப்போம். இவை இலங்கை அரசியல் பொருளாதாரக் கட்டமைவு, கருத்தமைவு சார்ந்த விடயங்களோடு தொடர்புடையவை.

1. சிங்கள தேசியவாதம் - எப்படி இனவாத உருவில் ஸ்தாபனமயமாக்கப்பட்டது?

2. சிங்கள இனவாத அரசினுல் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியிலிருந்து முகிழ்த்த தமிழ் தேசிய வாதத்தின் தன்மைகள் என்ன? தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் எத்தகைய மார்க்கங்களைக் கையாண்டது? இன்று தமிழ்மக்களின் உரிமைப் போராட்டங்கள் என்ன தன்மைகளைக் - கொண்டுள்ளன?

3. சிங்கள தேசிய வாதத்திற்கும், தமிழ்த் தேசிய வாதத்திற்கும் இடையே தொடர்ச்சியான, இயங்கியல் ரீதியான தொடர்பிருப்பதையும், இவற்றுக்கு அரசியல், பொருளாதாரத் தன்மைகள் இருப்பதையும் மறந்துவிடக் கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4. தமிழ்ப் போராட்ட அமைப்புகளின் இலங்கைப் புரட்சி பற்றிய நிலைப்பாடுகளும், முஸ்லீம், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள அரசியல் சக்திகள் பற்றிய கணிப்பீடுகளும் முக்கியமடைகின்றன.

எப்படித் தமிழ் இயக்கங்கள் முழு நாடும் சார்ந்த சமூகமாற்றங்களைப் பற்றிய கருத்துகளைக் கொண்டிருந்தன? என்ன மாதிரியான கொள்கைகளை அவை கடைப்பிடித்தன? முஸ்லீம் மக்கள் மத்தியில், சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய முற்போக்குச் சக்திகளைப்பற்றி அவை என்ன கணிப்பீடுகளைக் கொண்டிருந்தன? இந்த முற்போக்குச் சக்திகள் நமது விடுதலையில் என்ன பங்கு வகிக்க வேண்டும்? அல்லது வகிக்க முடியும்? என்பது பற்றி இயக்கங்கள் என்ன சிந்தித்தன?

5. தமிழ்நாட்டு திராவிடத் தேசிய வாதத்திற்கும், தமிழ்த் தேசியவாதத்திற்கும் இடையில் ஏற்படும் உறவுகள் பற்றியது. தமிழ்நாட்டின் திராவிட தேசிய வாதம் எப்படி ஈழத் தமிழரின் விடுதலை சார்ந்த, விடுதலையை அடிப்படையாகக்கொண்ட தேசியவாதத்தை உள்ளடக்க முற்பட்டது? எந்தளவிற்கு உள்ளடக்கியுள்ளது? ஈழத் தமிழரின் போராட்டம் தமிழ்நாட்டின் உள்நாட்டு அரசியலுக்கு எப்படிப் பயன்பட்டது?

6. இந்தியாவுக்குள்ளே இருக்கக்கூடிய ஜனநாயக, முற்போக்கு சக்திகள் நமது தேசிய இனப் பிரச்சினை பற்றியும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்கள் பற்றியும் என்ன நிலைப்பாடுகளை, என்ன கணிப்பீடுகளைக் கொண்டிருந்தன?

7. மிகவும் முக்கியமாக இந்திய முதலாளித்துவ அரசின் தேசிய நலன்கள் என்ன? அதாவது இந்தியா என்ற அமைப்பின் தேசிய நலன்களை இந்திய அரசு எப்படிப் பிரதிபலிக்கின்றது? அப்படிப் பிரதிபலிக்கும் பொழுது அந்த அரசு என்ன வர்க்க நலன்களை அடிப்படையாகக்கொண்டு இந்த தேசிய நலன்களையோ அல்லது தேசியத்துவத்தையோ பிரதிபலிக்கின்றது?

இவை எல்லாவற்றையும் பற்றி இங்கு ஆழ்ந்து ஆராய்வது எனது நோக்கமில்லை. அதைச் செய்யக்கூடிய தகைமை தற்போது என்னிடம் இல்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமும் ஆகும். ஆயினும் இவை சம்பந்தமாகச் சில குறிப்புகளை முன்வைக்கிறேன்.

குறிப்பாக நமது நாட்டுக்குள் இடம்பெற்றுள்ள சில விடயங்களைப் பார்ப்பது பயன்தரும்.

இலங்கையில் இனப் பாகுபாடு, இன ஒதுக்கல் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளது குறிப்பாக சிங்களப் பேரினவாதம் சுதந்திரத்திற்கு முன்பு

www.tamilarangam.net

அரசை எதிர்க்கும் ஒரு கருத்தமைவாக இருந்தது. அந்தக் கருத்தமைவில் பல அம்சங்கள் இருந்தன. ஒன்று காலனித்துவத்தை எதிர்க்கும் அதேநேரம் காலனித்துவத்துடன் சமரசம் செய்யும் தன்மையுள்ள கருத்தமைவு. அதாவது பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்குள் சுயாட்சி என்பது தான் பல சிங்கள தேசியவாதிகளின் நோக்கமாகவும் கருத்தாகவும் இருந்தது.

அதேநேரத்தில் இந்தச் சிங்கள தேசிய பௌத்த கருத்தமைவானது இலங்கைக்குள் இருக்கும் சிங்களவர் அல்லாத மற்ற இனத்தவர்களை எதிர்க்கும் ஒன்றாகவும் அமைந்தது. இந்த இரட்டைத் தன்மை ஆரம்பகாலத்திலிருந்தே சிங்கள பௌத்த வாதத்திற்கு இருந்தது. அந்தக் கட்டத்தில் சிங்கள பௌத்த வாதம் ஒரு அரச எதிர்பு கருத்தமைவாக இருந்தது.

1948க்குப் பின் குறிப்பாக 1956க்குப்பின் அது அரச கருத்தமைவாக மாறுகிறது. சிங்கள ஆளும் கட்சியினர், சிங்கள ஆளும் வர்க்கத்தின் சில பகுதிகளைப் பிரதிபலிப்போர், பிரதிநிதித்துவம் வகிப்போர் - தொடர்ச்சியாக கடந்த 30வருடங்களாக சிங்கள தேசிய வாத ஸ்தாபனமயமாக்கலைச் செய்து வந்துள்ளார்கள்.

இதற்கூடாகச் சிங்கள- மக்கள் ஒரு குறிப்பிட்ட தனித்துவத்தை, குறிப்பிட்ட தனித்துவம் பற்றிய சிந்தனையையும், உணர்வையும் பெற்றுள்ளார்கள். அந்த அடிப்படையில்தான் சிங்கள மக்கள் தங்களை இலங்கையர்களாகவோ, சிறிலங்கன்ஸ் ஆகவோ கருதுகிறார்கள். அவர்களுடைய - அந்த தம்மைப் பற்றிய மதிப்பீட்டில், தமது தனித்துவம் பற்றிய உணர்வில் சிங்கள பௌத்தம் ஒரு முக்கிய அம்சமாகவும் அவற்றை நிர்ணயிக்கும், அவற்றிற்குரிய வரைவிலக்கணத்தைக்கொடுக்கும் ஒரு கருத்தமைவாகவும் இருந்து வருகிறது.


இதன் விளைவாகவும்தான் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இன ஒதுக்கல், மற்றைய சிறுபான்மை இனங்கள்மீது காட்டப்பட்டுவந்த பாகுபாடுகள் - தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ளன.

இந்த இனப்பாகுபாடானது, இன ஒதுக்கலானது பிரதேச ரீதியில், வர்க்க ரீதியில் பல வேறுபாடுகளைக்கொண்டிருந்த- போதும், ஒரு இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களைத் - தொடர்ச்சியாகத் தாக்கியதாலும், குறிப்பாக 1970 களில் பெருமளவிற்கு தமிழ் சமூகத்தின் கீழ், நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவர்கள் இந்தத் தொடர்ச்சியான இன ஒதுக்கலாலும், இன பாகுபாட்டாலும் பாதிக்கப்பட்டதன் விளைவுகளை உணரத் தொடங்கி, அந்த விளைவுகளை அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

உதாரணமாக இதன்விளைவுகள், இனப்பாகுபாடும் இனஒதுக்கலும் நிலம் சம்பந்தப்பட்ட-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




நன்றி: கேடயம்

தாக, தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய நிலங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். கல்வி, வேலை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். குறிப்பாக கல்வி, வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் தாக்கங்களை வடபகுதியில் பெருமளவில் காணக்கூடியதாயிருந்தது.

இதன் விளைவே 1970 களில் மிகவும் பரந்துபட்ட — அதாவது சமூகத்தின் கீழ், நடுத்தர மட்டங்களில் இந்த இனஒதுக்கல் பற்றிய உணர்வு வளர ஆரம்பித்தது.

இதன் வெளிப்பாடுகள் ஆரம்பத்தில், அதாவது 1970 களில் வெகுஜனத்தன்மை உள்ளவையாகவும் இருந்ததை நாம்

www.tamilarangam.net

மறந்துவிடக் கூடாது. உதாரண-மாகத் தமிழ் மாணவர்கள் தரப்படுத்தலுக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் வெகுஜனத்தை அணிதிரட்டிய தன்மை இருந்ததை நினைவுகூர்வது பயன் தரும்.

ஆயினும் மிகவும் குறுகிய காலத்தில் வேறு சில பிரச்சினைகள், வேறு சில கேள்விகள் இந்த அரசியற் போக்குக்குள் எழுந்தன. அதாவது இதன் ஒரு அம்சமாக மரபு ரீதியான தமிழ்த் தலைமையை விமர்சிக்கும் ஒரு நிலை ஏற்பட்டது. அடுத்து தமிழ் மக்களின் உரிமையைப்பெறுவதற்கு ஒரு தனிநாடு தேவை என்பது பற்றி கேள்விகளும், விவாதங்களும் எழுந்தன. தமிழ் மக்களின் உரிமையை தனிநாட்டுக்கூடாகப் பெறுவதாயிருந்தால் அதை எப்படிப் பெறுவது? ஆயுதப் போராட்டத்திற்கூடாகத்-தான் அதைப் பெறமுடியும்? என்ற கேள்விகளும் எழுந்தன.

1970களைப் பார்க்கும் பொழுது இந்த அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு வகையில் இந்தக் காலகட்டத்-தில் ஆரம்பத்தில் முகிழ்த்த அந்த வெகுஜனத் தன்மையும், நமது விடுதலைப் போராட்டத்திற்கு என்ன மார்க்கம் என்ற விவாதமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆயினும் அவற்றின் முக்கியத்துவம் வெகு விரைவில் மிகவும் எதிர்பாராத வகையில் சிதைக்கப்பட்டு விடுகின்றன.

உதாரணமாக இந்தக் காலகட்டத்தில்தான் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், விடுதலை பற்றிச் சிந்தித்த குழுக்கள் மத்தியில் இடதுசாரிக் கருத்துகள் மீது நாட்டம் ஏற்பட்டது. மூன்றும் உலக நாடுகளில் விடுதலை இயக்கங்கள் எப்படிப் போராடுகின்றன? அவர்கள் விடுதலைக்கு என்ன வரைவிலக்கணங்களைக் கொடுக்கிறார்கள்? சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? சுயநிர்ணய உரிமையை எப்படி விளக்குவது? போன்ற கேள்விகளுக்கு அவர்கள் பதிலைத் தேடும் போது விடுதலை இயக்கங்கள் பற்றியும், இடதுசாரிக் கருத்துகளை மனதில் கொள்ளவும் தொடங்கினார்கள்.

ஆனால் 1970களில் இந்தக் காட்சியைக் காணும்நாம் 1980களைப் பார்க்கும்போது ஆயுதப் போராட்டம் என்ற கோட்பாடு நடைமுறையில்இராணுவ வாதமாக மாறுவதைக் காணலாம். அதாவது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு என்ன பங்கு? தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியான வெகுஜன எழுச்சிக்கு என்ன பங்கு? என்ற இரண்டு கேள்விகளையும் வைத்து பார்க்கும்பொழுது, ஆயுதப் போராட்டத்திற்கு இராணுவ-ரீதியிலான விளக்கத்தைத் தேடியதாலும், அதையே நடைமுறைப் படுத்த பல இயக்கங்கள் முயன்றதாலும் ஆயுதப் போராட்டம் சமன் இராணுவவாதம் என்றாகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுள்ளதைக் காணலாம். அதாவது இராணுவ வாதத்திற்கூடாகத்தான் அவர்கள் (இயக்கங்கள்) தமிழ் மக்களின் விடுதலைக்குரிய விளக்கத்தைக் கொடுக்க முன்வந்தார்கள்.

இதனால் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியான வெகுஜன எழுச்சிக்கும், பங்குபற்றலுக்கும் என்ன பங்கு? என்ற இரண்டாவது கேள்வி வெகுவிரைவில் முக்கியத்துவமிழந்து போய்விட்டது.

தமிழ் மக்களின் விடுதலை என்பது தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள அரசிடமிருந்து விடுவிப்பதும், அந்த விடுதலைதான் தமிழ் மக்களின் விடுதலை என்றும் காட்டப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு அந்த விடுதலை எதைக் கொடுக்க வேண்டும்? அந்த விடுதலையின் உள்ளடக்கம் என்ன? என்பவை பற்றிய விவாதங்கள் முக்கியமான இயக்கங்கள் மத்தியில் இடம்பெறவில்லை.

இங்குதான் தோழர் விசுவானந்ததேவன் போன்றோரின் கருத்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன. விசுவானந்ததேவனும், அவரைச் சார்ந்த தோழர்களும் மிகவும் இக்கட்டான நிலைமைகளில் இந்தக் கேள்விகளை எழுப்பினார்கள்.

நமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதப் போராட்டம் அவசியம். ஆனால் ஆயுதப் போராட்டத்தை இராணுவ வாதத்திற்கு உட்படுத்தக் கூடாது. இராணுவ வாதத்தை எதிர்க்கவேண்டும். ஆயுதப் போராட்டம் வெகுஜன எழுச்சியுடனும், வெகுஜனப் பங்குபற்றலுடனும் இணையவேண்டும் என்ற கேள்விகளைப் பல சந்தர்ப்பங்களில், பல மட்டங்களில் தோழர் விசுவானந்த தேவன் போன்றோர் கிளப்பினார்கள்.

ஏன் நமது மக்கள் ஆயுதமேந்தாத ஒரு வெகுஜனப்போராட்டத்தை, புரட்சிகர எதிர்ப்பைக் காட்டவில்லை? ஏன் இந்த நிலை? எனற் கேள்விகளை நான் உங்கள் முன் வைக்கிறேன். இயக்கங்கள் இக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதும் அவசியம். ஏனென்றால் தமிழ் மக்களின் விடுதலைக்கு அவர்கள் என்ன வரைவிலக்கணத்தைக் கொடுத்தார்கள்? தமிழ் மக்களின் விடுதலையை ஆயுதப் போராட்டத்திற்கூடாகத்தான் பெற வேண்டும் என்றால் அந்த ஆயுதப் போராட்டத்திற்கும் மக்களுக்கும் என்ன உறவு? என்ற கேள்விகள் மிகவும் முக்கியமானவை.


உண்மையில் நடைமுறையில் என்ன இடம்பெற்றதென்றால், ஆயுதப் போராட்டம் மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, இராணுவவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு விடுதலை என்றால் மக்களுக்கு ஜனநாயக சுதந்திரங்கள் என்பதற்கே இடமில்லாமல் போய்விட்டது.

www.tamilarangam.net

1980களில் இந்த நிலைமை இருப்பதைக் காணக் கூடியதாயுள்ளது. உதாரணத்திற்கு — 1983 ஜூலைச் சம்பவங்கள் நடைபெறும்போது என்ன அரசியல் நிலையில் நாம் இருந்தோம்? ஏற்கெனவே இராணுவவாதம் ஆதிக்கம் செலுத்தும் — நிலையிலும், விடுதலைக்கு வெகுஜனப் பங்குபற்றல் இல்லாதஒரு நிலையிலும்தான் இருந்தோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில்—தான் இந்திய வல்லரசு தனது தலையீட்டுக்குரிய மிகவும் சாதகமான நிலைமைகளைக் காணுகிறது. இந்திய வல்லரசின் போஷகத் தன்மைகள் அதாவது ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியாக தனக்குக் கீழ்ப்படுத்தி இந்த இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சியையும், மற்றும் வசதிகளையும் செய்து கொடுக்கும் நடவடிக்கைகள் — ஆரம்பமாகின.

இயக்கங்கள் சரியான ஆழ்ந்த அரசியல் பார்வைக்கு முக்கியத்துவம் கொடுக்காததாலும், தமிழ் மக்களின் விடுதலைக்குரிய பாதையென்ன? தமிழ் மக்களின் விடுதலையின் உள்ளடக்கம்




www.tamilarangam.net

என்ன?என்ற கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காததாலும் இந்திய அரசு இந்த இயக்கங்களை, இயக்கங்களின் இராணுவ வாதங்களைப் பயன்படுத்தியே தனது கருவிகளாக்கக் கூடியதாகவிருந்தது.

அத்துடன் ஒரு இயக்கத்தை இன்னொரு இயக்கத்திற்கெதிராகப் பயன்படுத்தவும், இயக்கங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை மிகவும் திறமையாகக் கையாண்டு சகல இயக்கங்கள் பற்றிய சகல தகவல்களையும் பெற்று எந்த இயக்கம்? எந்த வேலையைச் செய்யக் கூடியது? அதாவது இலங்கை அரசைப் பயப்படுத்தவதற்கும், நிலைகுலையவைப்பதற்கும் எந்த இயக்கத்தை? எந்த நேரம்? எந்த வழியில் பயன்படுத்த வேண்டும்? - போன்ற சகலவற்றையும் இந்திய அரசு மிகவும் சுலபமாக அறியக்கூடியதாகவும், நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

முக்கியமான இயக்கங்கள் இராணுவ வாதத்திற்குப் பலியாகி, அதையே தங்களுடைய விடுதலைக் குரலாக எழுப்பிவந்



www.tamilarangam.net

தது இந்திய அரசின் நோக்கங் களுக்கு மிகவும் உதவியாக இரு ந்தது.

உதாரணமாக சில சந்த ர்ப்பங்களில் சாதாரன சிங்கள பொதுமக்கள் பெருமளவில் - கொலை செய்யப்பட்டார்கள்.

ஆரம்பத்தில், நமது போ ராட்டத்திற்கு என்ன மார்க் கம்? தமிழ் மக்களின் விடுதலை யென்றால் அதன் உள்ளடக்கம் என்ன? ஆயுதப் போராட்டத்தின் பங்கு என்ன? மற்றைய நாடுக- ளின் விடுதலைப் போராட்டத்தி லிருந்து நாம் எவற்றைக் கற்று க்கொள்ளலாம்? என்ற கேள்வி- களை எழுப்பிய இளைஞர் குழு க்களும், இயக்கங்களும் 80களில் இப்படியாக இராணுவ வாதத் திற்குள் உள்ளாகி மாறிவிட்டன.

இது இந்திய அரசின் பிராந்திய நலன்களுக்கு மிகவும் பயன் தரக்கூடியதாகவும், சுலப மாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலைமையையும் ஏற்படுத்தியது.

மிகவும் சுருக்கமாகக்கூறு வதென்றால் இன்றைய நிலைமைக ளைப் பார்த்து அதிலிருந்து நா ங்கள் என்ன பாடங்களைப் படி த்து, எதிர்காலத்தைப் பற்றி எப்படிப் பார்க்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறினால், இந் திய மேலாதிக்கத்திலிருந்து இல ங்கை விடுபடுவதற்கு இலங்கைக் குள்ளேதான் அதற்குரிய அணிக ளைத் திரட்ட வேண்டும்.

இலங்கைக்குள்ளே சிங்கள மக்கள், முஸ்லீம் மக்கள், தமிழ் மக்கள் மத்தியில், எப்படி நமது உரிமைப் போராட்டத்தை இந் திய மேலாதிக்கத்திலிருந்து விடு விக்கும் போராட்டமாக மாற் றுவது என்ற கேள்வி எழுப்பப்ப டவேண்டும்.

ஆகவே நாம் மீண்டும் பழைய கேள்விகளுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது நமது விடுதலைப் போராட்டம் என்றால் என்ன? நமது விடுதலை யின் உள்ளடக்கம் என்ன?

இலங்கை மீண்டும் ஜனநாய கமயப்படுத்தல் இந்திய மேலா திக்கத்திலிருந்து விடுபடுவதில் - ஒரு அம்சந்தான். இது முழுநாடு ம் சார்ந்த அவசியமான விடய மாகும். இது இலங்கை அரசுக் கும், இலங்கையில் வாழும் சகல இனங்களுக்குமிடையிலான போ- ராட்டமுமாகும்.

அடுத்ததாக, சிங்கள மக் கள் இன்று மிகவும் கொடியவித த்தில் அரச இயந்திரத்தாலும், அரசின் குண்டர்களாலும் தாக்க ப்பட்டு வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைக ளைப் பெறுவதற்கு தமிழ் மக்க ளுடைய போராட்டத்தின் உதவி யின்றி பெறமுடியாதென்றே கரு துகிறேன். அதே போலவே தமி ழ் மக்களுடைய போராட்டம் தொடர்ந்தும் அவர்களுடைய - ஆரம்ப இலக்காகிய தமிழ் மக் களின் விடுதலை, தமிழ் மக்களின் உரிமைகள் என்பதை நோக்கி நகர வேண்டுமாயிருந்தால் நம து விடுதலைப் போராட்டம்

www.tamilarangam.net

பற்றிய மீளாய்வுகளை நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றைய இராணுவவாதத்தை விமர்சித்து ஆயுதப்போராட்டத்திற்கும், மக்களுக்கும், வெகுஜன எழுச்சிக்குமான உறவை நன்கு கிரகித்து, மீண்டும் அந்த நிலைப்பாட்டிற்குச்சென்று நமது எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது தமிழ் மக்களுடைய விடுதலை என்பது தமிழ் மக்களுக்கு ஜனநாயக சுதந்திரங்கள் கிடைக்கும் ஒரு விடுதலையாகவும் எங்கள் சமூகத்திற்குள்ளே இருக்கக் கூடிய சாதி அமைப்புகள், பிற்போக்கு அமைப்புகள், பெண்ணடிமை அமைப்புகள் என்பவற்றையெல்லாம் மாற்றி நமது சமூகம் ஒரு நாகரிகமுள்ளநவீன சமூகமாக, ஜனநாயக விழுமியங்களை விரும்பிப் பேணி, அந்த விழுமியங்களைத் தங்கள் வாழ்க்கைக்குள் உள்வாங்கும் ஒரு சமூகமாக மாறவேண்டும் என்றஅந்த ஒரு இலட்சியத்தோடுதான், நாம் நமது விடுதலையின் உள்ளடக்கத்தை வரைவிலக்கணம் செய்யும்போது அணுகவேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது நமது ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம், சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டுள்ளதை அறியலாம்.

இப்படிச் சொல்வது நமது போராட்டத்தின் இலக்குகளை பொதுவான இலங்கையின் ஜனநாயகமயப்படுத்தல் இலக்குகளுக்கு கீழ்ப்படுத்த வேண்டும் என்றல்ல. தமிழ் மக்கள் சுயாதீனமாக தங்களுடைய போராட்டத்தை நடத்தும் அதேவேளையில் முஸ்லீம் மக்களுடனும், சிங்கள மக்களுடனும் இணைந்து — பொது எதிரியாகிய இலங்கை அரசுக்கெதிரான பேராட்டத்தை முன்னெடுப்பது அவசியம்.

---

மேற்கு ஜேர்மெனி தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கீழுள்ள தபாற் கந்தோர் கணக்கு இலக்கத்திற்கு தங்கள் சந்தாத் தொகையை அனுப்பி வைத்தல் விரும்பத்தக்கது.

Postscheckamt Dortmund Konto 308 07-468 BLZ 440 100 46

---

www.tamilarangam.net

# கலிங்கத்துப் பரணி.

---

வெறும் வளவு

புளியமரம்.

குழந்தைகளுக்கு கதை சொல்லிக் கொண்டிருக்கும் பாட்டா.

பேய்க்கதை. பெண் பேய்க்கதை

வேற்றூரின் ஒற்றைப் பனையிலிருந்து

இப் புளிய மரத்திற்கு வந்த இளம் பேய்.

எட மக்காள்! ராசாக்களுக்கெண்டு ராச்சியங்கள்

இருந்தமாப்போல பேய்களுக்கெண்டும்....

பாட்டாவின் வியப்பு, ஒன்றிப்பு.

குழந்தைகள் பாட்டாவை மிஞ்சி விட்டன.

இஞ்சை வந்த கொஞ்ச நாளைக்குப் பிறகு

ஒரு ஆண் பேயோட கூட்டா இருக்கையிக்கை.....

www.tamilarangam.net

கதையில் இரண்டு பேய் வந்துவிட்டதில்
பாட்டாவின் வாயிலிருந்து வந்த
ஒவ்வொரு வார்த்தைகளிற்கும் இடையில்
'இதுவரை உணர்ந்திராத அமைதி.'

தங்கண்டை பட்டானம் பரியலம் எல்லாம்
சிரஞ் சிறப்புமா இருக்க வேணும் எண்டதால
அதுகள் இருக்கிற இடமெல்லாம்
அலைஞ்சு வரும் .......

எச்சிப் பேய் _ அழும்
சுடலைமாடன் _ முரண்டு பிடிக்கும்
காவேறி _ பிரண்டு உருளும்
நெடுங்குடலி _ கதறும்

www.tamilarangam.net

பெட்டைப் பேயும் மூர்ந்தி

இப்பிடித்தான் இருந்து வந்திச்சுது .....

பிரச்சனையள விட்டா அது முத்திப் போகும்

எல்லாப் பேய்க்கும் அது ஈனமாப் போகும் .

பெட்டைப் பேய் சமாதானம் பிடிச்சு

பிரச்சனையை தீர்த்து வைச்சுது.

குழந்தைகள் ஏனென்று கேட்கவில்லை

பாட்டா மொட்டையாய்க் கதை சொல்ல மாட்டார்.

'எல்லாப் பேய்க்கும் பொதுவில பெரிய அண்டா

'அடிச்சுக் கொண்டுவாற உணவெல்லாம்

அதுக்குள்ள போட வேணும்'

'ஆட்டையோ, மாட்டையோ , குஞ்சு குருமனையோ அடிச்.

எல்லாம் ஒண்டா இருந்து ஒக்கலிக்க வேணும்!

'மனிசரைத் தாவயிக்கை

எல்லாப் பேயும் ஒண்டு மண்டாத் தாவ வேணும் .

குழந்தைகள் இனியும்
மௌனமாக இருக்கும் தன்மையை இழந்துவிட்டன.

தேகம் புல்லரிக்க
ஒண்டை ஒண்டு நெளிஞ்சு ... பதறி

எல்லாப் பேயும் இனி எங்களையும் அழிக்குமே .... ?

ஈனக் குரலில் பாட்டாவின் நெஞ்சில்
ஊசியால் எழுதியது வார்த்தை


நாங்கள் பயந்தாத்தான் அதுகள் எங்களை அழிக்கும்.
நாங்கள் துணிச்சலா இருப்பம் ..... மக்காள் ... !

சுதன்

இக் கவிதையில் வரும் 'பேய்கள்' பாசிச அரசுகளையும், பாசிச இயக்கங்களையும் குறிக்கின்றன. எந்தப் பேய் எந்த அரசு? எந்த இயக்கம்? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

www.tamilarangam.net





# கனவை மிதித்தவன்

- பார்த்திபன்

மரங்களிலிருந்து விவாகரத்துப் பெற்ற இலைகள் சுதந்திரமாகக் காற்றில் பறந்து கொண்டிருந்தன. நகர சுத்தித் தொழிலாளர்களின் வேலைப்பளு அதிகரித்திருந்தது.

பணமுள்ளவர்கள் பறந்து போய் சூரியனைப் பெற்றுக்கொள்வார்கள் எனத் தெரிந்து கொண்டு குளிர் மெல்ல மெல்ல தனது ஆக்கிரமிப்பை நடத்திக்கொண்டிருந்தது.

"பசையைத் தா"

"என்ராப்பா அப்பிடிப் பசியே?"

"விளையாடாதை. கையில கத்திரிக்கோல்தான் இருக்குது!"

"இவன் என்னடாப்பா.. இயக்கங்களைவிட மோசமாயிருக்கிறான். எடுத்தவுடன கத்திரிக்கோலாம்"

தேவாலயத்திற்குச் சொந்தமான மண்டபத்தில் முத்து, கணேசன், பாலகுமார், ஞானம் ஆகியோர் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஞானம் ஏணியை நகர்த்தி நகர்த்தி மேலே நூல் கட்டிக் கொண்டிருக்க, முத்துவும், கணேசனும் துண்டு துண்டு கிறேப்பேப்பர்களை பசை தேய்த்து நீளமாக்கிக் கொண்டிருந்தார்கள். பாலகுமார் களைத்துப் போய் பியர் குடித்தான்.

"பலூனுகளைக் காணேல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசந்தன் மறந்து போனனோ?" ஞானம் நூலை முடிச்சுப்போட்டுக்கொண்டு கேட்டான்.

"அது கலியாணத்துக்குப் பிறகல்லோ" பாலகுமாருக்குள் சாடையாக அற்ககோல் வந்திருந்தது.

"முதேசி, உனக்கெப்பவும் உந்த நினைப்புத்தான்" முத்து பசைக் கையை டெனிமில் துடைத்தபடி ஏசினுன்.

"கடைசியா எங்களோட வந்த வசந்தனும் கலியாணம் முடிக்கிறன். நாங்கள்தான் உப்பிடியே இருக்கிறம்" பாலகுமாரின் சலிப்பு.

"ஒரு இடத்தில ஒழுங்கா நிக்க மாட்டாய். உனக்கு கலியாணமோ? கூறையோட சில்லுச் சப்பாத்தும் கொண்டந்தால்தான் உன்னைக் கட்டிறவை ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்" ஞானம் சிரித்துக் கொண்டான்.

"கதையாம அலுவலைப் பாருங்கோ. பன்ரண்டாய் போச்சு. எத்தினைக்கு ஞமுக்குப் போறது?"

"ஏன்? ஆமிக்காறன் பிடிச்சுப் போடுவனே?"

"விளங்காமக் கதையாத. அங்கங்க நாசிக்காறங்கள் எங்கடையாக்களைப் பிடிச்சு சாத்தியிருக்கிறங்களாம்" என்ற கணேசன் பல சம்பவங்கள் கேள்விப்பட்டிருந்தான்.

"சும்மா அடிக்கிறங்களே. எங்கடையளும் ஏதேன் சொறிஞ்சிருக்கும்"

"விசர்க் கதை கதைக்கிருய். பமிலியளுக்கும் போட்டிருக்கிறங்கள்"

"நங்கள் உப்பிடி ஆராய்ச்சி பண்ணிறதிலயே நேரம்போகுது. அலுவலைக் கவனியுங்கோ" ஞானம் நூல்களைக் கட்டி முடித்துவிட்டான். இனிக் கிறேப் பேப்பர்களைச் சுருட்டித் தொங்கவிட வேண்டும். பிறகு பலூன் கட்ட வேண்டும். கதிரைகள் ஒழுங்கு செய்ய வேண்டும்.

எல்லோரும் மறுபடி அவசரமாகத் தொடங்கினுலும், ஒரு சில நிமிடங்களுக்கு மேல்வாயை மூடியிருக்க முடியவில்லை.

"வசந்தனுக்கு மனிசியை கூப்பிட எவ்வளவு முடிஞ்சிதாம்? பாலகுமார் விசாரித்து வைத்தான்.

"கிழிச்சான். அவனுக்கெங்க முடிஞ்சது. எல்லாம் பொம்பிளை பகுதிதான்" என்றுன் முத்து

"பிளைற் காசுமோ?"

"ஏஜென்சிக் காசு, நகைநட்டு, ரிக்கற், சீதனம் எல்லாம் பொம்பிளையின்ரை தாய்தேப்பன் சேத்து வைச்சது இல்லாட்டி மாறினதுதான்"

"எனக்கென்டா சிரிப்பாயிருக்கடாப்பா. எங்களோட சும்மா இருந்து தண்ணியடிச்சுக்கொண்டிருந்த வசந்தனுக்கு எங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கயோ இருந்த பெட்டையொ-ண்டு காசு செலவழிச்சு சிங்கப்பூர், தன்சானியாவெண்டு கஷ்டப்பட்டு வந்து கலியாணம் செய்யிறதெண்டா உது பே வேலையெல்லோ"

"உள்ளுக்கு இருந்துபோட்டு வாறாய். உனக்கு நாட்டுநடப்பெங்க விளங்கப் போகுது. இப்ப பிராங்பேட்டுக்கு வந்துகொண்டிருக்கிறவையில கனபேர் கலியாணம் பேசித்தான் வருகினம். வயது குறைஞ்ச பெட்டையளை-எல்லாம் தாய், தேப்பன் உயிருக்குப் பயந்து கலியாணம் செய்ய அனுப்பிக் கொண்டிருக்குதுகள்" முத்து கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டிருந்தான்.

"ஏன்ராப்பா இலங்கையில இருக்கிற சனம் அப்பிடி யோசிக்கிற இல்லயே?"

"யோசிக்கிற மாதிரித்-தான நீங்கள் நடக்கிறியள். உழைச்ச காசை மூட்டையாய்கட்டிக்கொண்டு இலங்கைக்கு போட்டு வாறியள். அங்க உங்கட சிலுப்புகளைப் பாத்த சனங்கள் இஞ்சயேதோ கொட்டிக் கிடக்குதாக்கும் எண்டுதானே நினைக்குங்கள். போதாததுக்கு ஆமிக்-காறங்களிண்ட அட்டகாசம் ஒரு பக்கம். இயக்கங்களின்ரை அநியாயங்கள் மற்றப் பக்கம். சனங்கள் ஆரிட்டத் தப்பிறது? ஆம்பிளையளெண்டால் ஒண்டில் கொண்டுபோய் சித்திரவதை செய்து-கொல்லுறாங்கள். இல்லாட்டி தங்களுக்குப் பாங்காப்பா படை கட்ட இழுத்துக்கொண்டு போறாங்கள். பொம்பிளையள் இதைவிட வேற கனக்க சித்திரவதையளையும் சந்திக்க வேண்டியிருக்கு. இதுகளைத் தாய், தேப்பன் பாத்துக்கொண்டிருக்குங்களே? தங்கட பிள்ளையள் எப்பிடியாவது உயிரோட இருந்தாக் காணும் எண்டு லட்சமாய் செலவழிச்சு இஞ்ச அனுப்பி வைக்குதுகள்" என முத்து விளக்கிறான்.

"அது சரியடாப்பா. எங்களைப் போல அதுல் அடிக்கு பொம்பிளையளையும் அனுப்பலாந்தானே? ஏன் இருவது வயதுப்-பெட்டையளுக்கு முப்பது, நாப்பது வயசுக்காறனையெல்லாம் - கலியாணம் பேசுவான்?" பாலகுமார் ஒரு போத்தலை வெற்றுக்கி, அடுத்த போத்தல் மூடியை லைற்றரால் றிக்சாகத் திறந்தான்.

"நீ கேப்பாய். இஞ்சயெல்லாம் பொம்பிளையளை மனுசராய் மதிக்கிற ஆம்பிளையள்தான இருக்கிறியள். உங்களை நம்பி அனுப்ப. விசர்க்கதை கதைக்கி-றாய். முந்தி பேலின்ல வந்தபொம்பிளையளுக்குச் செய்த மாதிரி இப்ப பிராங்பேட் காம்புக்குப் போய் உதவி செய்யிறம் எண்டு பேக்காட்டி கூட்டியந்து நாசப் படுத்திறாங்கள். இப்பிடி பண்பு மிக்க தமிழ் மறவர் நிறையஇருக்கேக்க தங்கட பிள்ளையளைச் சும்மா அனுப்பி வைக்க தாய், தேப்பன் என்ன யோசிக்க - ஏலாததுகளே?" முத்து கோபம

(தொடர்ச்சி 44ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

நவம்பர் 1989 இலம் : 23

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............ THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைந்ததை அறியக் கூடியதாயிருந்தது.

"நீ ஆகத்தான் பெடியள இன்சல்ற் பண்ணிறாய்" பாலகுமார் மிடர் விட்டுக்கொண்டான்.

"ம்உம். இங்கிலிசு வேற"

"டேய், தயவுசெய்து அரசியல் கதையாதையுங்கோ. முல் பாத்தியில தொடங்கி அடிதடியிலதான் போய் முடியும்" கணேசன் எச்சரித்தான்.

"அரசியலோ? இவன் ஆர டாப்பா. அவங்கள் கலியாணக்கதையல்லோ கதைச்சுக்கொண்டிருக்கிறாங்கள்" என்றான் ஞானம் வியந்து.

"உனக்குத் தெரியாது. உதுகும் அரசியல்தான்" கணேசன் விடாப்பிடியாக நின்றான்.

முத்து சிரித்தபடி" அவன் சொல்லுறதிலயும் பிழை இல் லை. எங்கட சமூகத்தைப் பற்றி என்ன கதைச்சாலும் அரசியல்தான். சாப்பிடுற அரிசியிலயும் அரசியல் இருக்கெண்டு புத்தகங்கள் வழிய எழுதுறாங்கள்" என்றான்.

"ஆன் பியரில மட்டும்இல்லையெண்டு அடிச்சுச் சொல்லுவன்" அடுத்த மிடர் பாலகுமாருக்குள்.

"வொல்லும் நாப்பதில எடுத்தியெண்டா நீயும் கதைக்கலாம். பகிடியளை விட்டிட்டு அலுவலைப் பாருங்கோடா. உப்பிடி விளையாடிக் கொண்டுநின்டால் வசந்தன் தாலிகட்டேக்கதான் கிறேப் பேப்பர் கட்டி முடியும்" கொட்டாவி ஞானத்திடமிருந்து.

மறுபடியும் எல்லோரும் சோம்பலாய் ஆரம்பித்தார்கள். ஞானமும், முத்துவும் ஏணிகளில்ஏறி நின்று இரண்டு பக்கமும் உயரத்தில் நிற்க, கணேசனும், பாலகுமாரும் கிறேப் பேப்பர்களைச் சுருட்டிக் கொடுக்க, தொங்கவிட்டார்கள். பிறகு கதிரைகளை அடுக்கிறார்கள்.

"எவ்வளவு சனம் வருமாம்?"

"தான் போய் பிறசன்ற் பண்ணின எல்லாரையும் கட்டாயம் கூப்பிட்டிருப்பான் கணக்கு செட்டில் பண்ண. இந்த ஸ்ரட்டில் இருக்கிறவை, சொந்தக்காறர் எண்டு பாத்தா நூற்றைம்பது, இருநூறு தேறும்"

"நாட்டில நடக்கிற பிரச்சினையளை இங்கத்தை சனத்துக்கு விளங்கப்படுத்திக் கூட்டம் வைப்பம் எண்டா பத்துப் பேர் கூட வராயினம். கலியாணம் பேத்டே எண்டா மட்டும் நேரப் பிரச்சினை, காசுப் பிரச்சினை ஒண்டும் இல்லாம அள்ளுப்பட்டு கொண்டு வருவினம்"

"ஏன் தெரியுமே? உப்பிடி விசேசங்களிலதான நகையள், சிங்கப்பூர் சேட், லோங்ஸ்எண்டு அந்த மாதிரி வரலாம்"

"திருப்பியும் அரசியலுக்கு போறியள்"

(இன்னும் வரும்)